பேட்டரி காரில் கோட்டையை சுற்றிப்பார்த்த முதல்வர் விஜய்

சென்னை தலைமை செயலகத்தில் நேற்று தவெக நிர்வாகிகள் அதிகளவில் குவிந்ததால் வாகனம் நிறுத்துமிடம் நிரம்பியது. இதனால் எந்த வாகனத்தையும் அனுமதிக்காமல் முக்கிய நுழைவாயிலை போலீசார் மூடியதால் ராஜாஜி சாலையில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

சென்னை, மே 23: தலைமைச் செயலக வளாகத்தில் நேற்று முதல்வர் விஜய் பேட்டரி காரில் சென்று சுற்றிப்பார்த்து ஆய்வு மேற்கொண்டார். அங்குள்ள பழமையான தேவாலயத்திற்கும் சென்று வழிபட்டார். மேலும் கட்டிடங்களையும் பார்த்து ஆய்வு மேற்கொண்டார். இதை தொடர்ந்து முதலமைச்சரின் தனிப்பிரிவுக்கு சென்றும் ஆய்வில் ஈடுபட்டார். கோட்டை அருங்காட்சியகத்துக்கு சென்று பழமையான பொருட்களை பார்வையிட்டார்.

தேவாலயம் சென்று வழிபட்டார்

முதலமைச்சர் விஜய், தலைமைச் செயலகத்தில் ஆய்வு மேற்கொள்ளும் தகவல் அறிந்து அவரை காண பொதுமக்கள் ஏராளமானோர் திரண்டனர். இதனால் அப்பகுதியில் ஏராளமான போலீசார் குவிக்கப்பட்டனர்.

சென்னை தலைமை செயலகத்தில் நேற்று தவெக நிர்வாகிகள் அதிகளவில் குவிந்ததால் வாகனம் நிறுத்துமிடத்தில் நிறுத்த இடமில்லாமல் வாகனங்கள் நிறைந்தது. இதனால் போலீசார் எந்த வாகனங்களையும் உள்ளே அனுமதிக்காமல் நுழைவாயிலை மூடினார். இதனால் பலர் சாலைகளில் வாகனங்களை நிறுத்தினர். இதன் காரணமாக ராஜாஜி சாலையில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

22 ஐஏஎஸ் அதிகாரிகள் மாற்றம்

சென்னை, மே 23: தமிழகத்தில் 22 ஐஏஎஸ் அதிகாரிகளை மாற்றி தலைமை செயலாளர் சாய்குமார் உத்தரவிட்டுள்ளார். இதுகுறித்து தமிழக தலைமை செயலாளர் சாய்குமார் நேற்று வெளியிட்டுள்ள உத்தரவில் கூறி இருப்பதாவது:

பெயர்	பழைய பதவி	புதிய பதவி
சந்தியா வேணுகோபால் சர்மா	தொழில் வளர்ச்சி கழக செயலாளர்	திட்ட வளர்ச்சி துறை செயலாளர்
குமரகுருபரன்	சென்னை மாநகராட்சி ஆணையர்	வணிகவரி, பத்திரப்பதிவு மற்றும் அறநிலையத்துறை
சொர்ணா	சுற்றுலா துறை செயலாளர்	சிறப்பு அமலாக்கத்துறை செயலாளர்
சந்தீப் நந்தூரி	தொழில் வளர்ச்சி கழக மேலாண் இயக்குனர்	முதலீட்டு மேம்பாட்டு மற்றும் வணிகதுறை செயலாளர்
பிரகாஷ்	சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்	வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை துறை ஆணையர்
ஷோபனா	எழுது பொருள் அச்சுத்துறை ஆணையர்	ஜவுளித்துறை ஆணையர்
ஷில்பா பிரபாகர்	வணிகரித்துறை செயலாளர்	தொழிலாளர் துறை ஆணையர்
கிரண் குராலா	போக்குவரத்து துறை ஆணையர்	நகர்ப்புற மற்றும் ஊரக திட்டத்துறை ஆணையர்
விஜயகார்த்திகேயன்	(விடுமுறையில் இருந்தார்)	மீன்வளத்துறை மேலாண் இயக்குநர்
மகேஷ்வரி ரவிக்குமார்	கைத்தறி துறை இயக்குநர்	சமூக நலத்துறை இயக்குனர்
செந்தில்ராஜ்	தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழக மேலாண் இயக்குனர்	ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர்
பாஸ்கர் பாண்டியன்	தமிழ்நாடு சாலை திட்டம் (சென்னை-கன்னியாகுமரி தொழிற்சாலை காரிடார் திட்ட இயக்குனர்)	போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு துறை இயக்குநர்
சாருஸ்ரீ	(விடுமுறையில் இருந்தார்)	கருவூலம் மற்றும் கணக்குத்துறை இயக்குநர்
ரவிக்குமார்	கரூர் மாவட்ட கலெக்டர்	திருப்பத்தூர் மாவட்ட கலெக்டர்
ஆஷா அஜித்	தமிழ்நாடு கிராம உருவாக்க திட்ட தலைமை செயல் அதிகாரி	சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்ற துறை இயக்குனர்
கிறிஸ்துராஜ்	டாஸ்மாக் மேலாண் இயக்குனர்	நிலஅளவை மற்றும் செட்டில்மெண்ட் இயக்குனர்
பி.கார்த்திகேயன்	நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர்	தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழக செயலாளர்
டி.ஜி.வினய்	சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று மேலாண் இயக்குனர்	தமிழ்நாடு பசுமை மின்சார கழக மேலாண் இயக்குனர்
அனிஷ்சேகர்	தமிழ்நாடு பசுமை மின்சார கழக மேலாண் இயக்குனர்	தேசிய சுகாதார மிஷன் இயக்குனர்
சஞ்ஜீவனா	தமிழ்நாடு பெண்கள் மேம்பாட்டு கழக இயக்குநர்	தமிழ்நாடு ஊரக உருவாக்க திட்ட தலைமை அதிகாரி, பெண்கள் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்பு திட்ட இயக்குநர்
எஸ்.ஏ.ராமன்	தொழிலாளர் துறை ஆணையர்	மாநில தொழில் வளர்ச்சி கழக மேலாண் இயக்குநர்
லலிதா தித்யா	ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துறை கூடுதல் ஆணையர்	சேலம் மாநகராட்சி ஆணையர்

யாரையும் புண்படுத்தும்படி கடுஞ்சொற்களை பேச வேண்டாம்

தொண்டர்களுக்கு மு.க.ஸ்டாலின் அறிவுரை

சென்னை, மே 23: யாரையும் புண்படுத்தும்படி கடுஞ்சொற்களை பேச வேண்டாம் என்றும் தொண்டர்களுக்கு திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவுரை வழங்கியுள்ளார்.

தமிழக அமைச்சர்களாக நேற்று பதவி ஏற்ற விசிக எம்எல்ஏ வன்னியரசுக்கும், ஐயூஎம்எல்ஏ ஷாஜஹானுக்கும் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். அதோடு, அவர்கள் தவெக அமைச்சரவையில் இடம்பெற்றது குறித்து கடுஞ்சொற்களால் விமர்சிக்க வேண்டாம் என்று திமுகவினருக்கு மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக, திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் நேற்று தனது டிவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:

அமைச்சர்களாகப் பொறுப்பேற்றுள்ள நம் கொள்கைத் தோழமைகள் வன்னியரசுக்கும், ஷாஜஹானுக்கும் எனது வாழ்த்துகள். தங்களது அரசியல் முடிவைத் தீர்மானிக்கும் உரிமை எந்தக் கட்சிக்கும் உண்டு. எனவே திமுகவினர் இந்த நேரத்தில் யாரையும் புண்படுத்தும்படி கடுஞ்சொற்களைப் பேச வேண்டாம் என்பது தான் உங்கள் தலைவராக எனது அன்பு வேண்டுகோள்.

அண்ணா வழியிலும், கலைஞர் வழியிலும் வந்தவர்கள் நாம். அதை மறந்திட வேண்டாம். நல்லதைப் பாராட்டி, அல்லதை விமர்சிக்கும் ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியாகச் செயல்படுவோம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

16 இடங்களில் சதமடித்த வெயில்

சென்னை, மே 23: தமிழகத்தில் கடந்த சில நாளாக பல்வேறு பகுதிகளில் வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளது. இந்நிலையில், நேற்று தமிழகத்தில் சென்னை, ஈரோடு, கரூர், காரைக்கால், மதுரை, நாகப்பட்டினம், நாமக்கல், பாளையங்கோட்டை, பரங்கிப்பேட்டை, புதுச்சேரி, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருத்தணி, தூத்துக்குடி, வேலூர் உள்ளிட்ட 16 இடங்களில் சதம் அடித்தது. அதிகபட்சமாக ஈரோட்டில் 106 டிகிரி வெயில் அடித்துள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அதேநேரம் நேற்று தமிழகத்தில் ஓரிரு இடங்களில் மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக ஓசூரில் 75 மிமீ மழை பெய்துள்ளது.

இன்று தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலையில் குறிப்பிடத்தக்க மாற்றத்திற்கான வாய்ப்பு குறைவு. நாளை முதல் 26ம் தேதி உள் தமிழக பகுதிகளில் சற்று வெப்பநிலை குறையக்கூடும் எனக் கூறப்பட்டுள்ளது.

ஆய்வு நடத்தியும், அதிகாரிகளுக்கு அட்வைஸ் செய்தும் அத்துமீறுவதால் மக்கள் அதிருப்தி

சென்னை மாநகராட்சி மண்டல கூட்டத்தில் தவெகவினர் புகுந்து ரீல்ஸ் எடுத்து அட்டகாசம்

■ மக்கள் பிரதிநிதிகளின் பணிகளை கையில் எடுத்ததால் வறுத்தெடுக்கும் சமூகவலைதள மீம்ஸ்கள்

■ அரசு அலுவலகங்களுக்குள் புகுந்து தொடர்ந்து அடாவடியில் ஈடுபடும் அவலம்

■ கேலி கூத்தாக மாறி வரும் அரசு நிர்வாகங்கள்

மாநகராட்சி மண்டல கூட்டத்தில் புகுந்த தவெகவினர், அதிகாரிகளுக்கு அறிவுரை கூறியும், கூட்டத்தில் போனை வைத்து ரீல்ஸ் எடுத்தும் அட்டகாசம் செய்கின்றனர்.

சென்னை, மே 23: தவெக ஆட்சி அமைந்த நிலையில் அரசு அலுவலகங்களுக்குள் புகுந்து தவெகவினர் ஆய்வு நடத்தியும், அதிகாரிகளுக்கு அட்வைஸ் செய்தும் அத்துமீறி வரும் செயல் பொதுமக்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ள நிலையில் அரசு நிர்வாகங்கள் கேலி கூத்தாக மாறி உள்ளதாக விமர்சனங்கள் எழுந்துள்ளது.

தமிழக சட்டமன்ற தேர்தலில் தமிழக வெற்றிக் கழகம் வென்று ஆட்சியைப் பிடித்துள்ளது. அக்கட்சி தலைவர் விஜய் முதல்வராக பொறுப்பேற்றுள்ளார். அவருடன் சேர்த்து இதுவரை 35 பேர் அமைச்சர்களாக பதவி ஏற்றுள்ளனர். தமிழகத்தில் மாற்றத்தை கொண்டு வர வேண்டும் என்ற ஒருதலைப்பை வைத்துக்கொண்டு சமூக வலைதளங்களில் தவெக ஆதரவாளர்கள் வெளியிட்ட ரீல்ஸ், மீம்ஸ்கள் மூலம் தான் விஜய் ஆட்சியை பிடித்தார் என்பது அரசியல் விமர்சகர்களின் குற்றச்சாட்டாக இருந்து வருகிறது.

ஆட்சியை பிடித்த கையோடு தமிழ்நாட்டில் பெரிய அளவில் மாற்றம் வரும் என்று எல்லாரும் எதிர்நோக்கி இருந்தாலும், அதற்கான அறிகுறிகள் எதுவும் இதுவரை தெரியாமல் இருப்பதால் அவரை வாழ்த்திய அதே சமூக வலைதளங்கள் தவெக ஆட்சியை விமர்சிக்க தொடங்கி உள்ளன. ஆட்சி அமைத்த நிலையில், தவெகவினர் தமிழ்நாட்டில் நடத்தும் அலப்பறைகள் எல்லை மீறி செல்வது தற்போது பொதுமக்கள் மத்தியில் கடும் விமர்சனத்துக்குள்ளாகி வருகிறது.

பொதுவாக தமிழ்நாட்டில் ஒரு கட்சி ஆட்சிக்கு வருகிறது என்றால் அக்கட்சியைச் சேர்ந்த தொண்டர்கள் தங்களது செல்வாக்கை காட்டும் வகையில் சில செயல்களில் ஈடுபடுவார்கள். ஆனால், புதிதாக அமைந்துள்ள தவெக ஆட்சி அப்படி இருக்காது என பொதுமக்கள் நம்பியிருக்கும் நிலையில் சிலர் செய்யும் செயல்களால் தவெக அவப்பெயரை சந்திக்க தொடங்கியுள்ளது. அதற்கு காரணம், தவெகவினர் என்ற ஒன்றை வைத்துக் கொண்டு மக்கள் பிரதிநிதிகள் செய்ய வேண்டிய வேலைகளை இவர்களே செய்ய தொடங்கியிருப்பது கேலிக் கூத்தாக உள்ளது.

எம்எல்ஏக்கள் செய்ய வேண்டிய பணிகளை தவெகவினர் என்ற பெயரில் அரசு அலுவலகங்களில் புகுந்து ஆய்வு நடத்த வந்துள்ளோம் என்று வாக்குவாதம் செய்வதை பார்த்தால் சிரிப்பதா அல்லது அவர்களை கண்டிப்பதா என தெரியாமல் தமிழ்நாடே தற்போது விழிபிதுங்கி நிற்கிறது. தவெகவினரின் சமீபத்திய நிகழ்வுகளை பார்த்தால், 'குழந்தைகளை காரில் அமர வைத்தால் ஸ்டீரியங்கை திருப்பி விளையாடுவது' போன்று இவர்களின் செயல்கள் உள்ளதாக விமர்சிக்கப்படுகிறது.

குறிப்பாக, அரசு அலுவலகங்கள் மற்றும் மருத்துவமனைகளில் ஆய்வு என்ற பெயரில் தவெகவினர் அத்துமீறி வருவதாக புகார்கள் எழுந்த வண்ணம் உள்ளது. ஒரிடத்தில் பிரச்னை என்றால் சம்பந்தப்பட்ட மாவட்ட எம்எல்ஏ., அமைச்சர்கள், மேயர், ஆட்சியர், அரசு அதிகாரிகள் என ஆய்வு மேற்கொள்ள இத்தனை பேர் உள்ளனர். ஆனால் நாங்களும் அந்த பணிகளை செய்வோம் என்று ஒவ்வொரு மாவட்டத்திலும் தவெகவினர் கிளம்பி இருப்பதை பார்க்கும் போது தமிழ்நாடு அரசையே கேலிக் கூத்தாக்கியுள்ளது.

ஆர்வ மிகுதியில் சிலர் செய்யும் தவறுகள் முதல்வர் விஜய்யை தான் பாதிக்கும் என்பதை அவர்கள் சிந்திக்க வேண்டும். குறிப்பாக, தென்காசி மாவட்டத்தில் அரசு மருத்துவமனையில் தவெக மருத்துவரணி என்ற பெயரில் டாக்டர்களுக்கான கோட்டை போட்டுக்கொண்டு சிலர் ஆய்வு செய்ததும், கன்னியாகுமரியில் பேரூராட்சி அலுவலகத்தில் சென்று தவெகவினர் அத்துமீறி ஆவணங்களை எடுத்ததும் காவல் நிலையம் வரை புகார் சென்றுள்ளது.

அடுத்ததாக, அணைக்கட்டு அரசு மருத்துவமனைக்குள் தவெக மாவட்ட செயலாளர் மற்றும் அவரது ஆதரவாளர்கள் கும்பலாக அத்துமீறி நுழைந்து, "நான் அமைச்சர் அதிகாரத்திற்கு உரியவன்" என கூறி அதிகாரிகளை மிரட்டியதாக சர்ச்சைகள் எழுந்தன. அதேபோன்று, கிருஷ்ணகிரி மற்றும் பிற பகுதிகளில் நடந்த தவெக கொடியேற்று விழாக்கள் மற்றும் பொது நிகழ்ச்சிகளில் தொண்டர்கள் சிலர் வரம்பு மீறி நடந்து கொண்ட காட்சிகள் இணையத்தில் பெரும் விவாதத்தை ஏற்படுத்தின.

மேலும், பாரம்பரிய திருவிழாக்களில் தவெகவினர் கொடியை வைத்துக்கொண்டு செய்த அலப்பறைகள் தொடர்பான வீடியோக்களும் ஊடகங்களில் பரவலாகப் பேசப்பட்டன. அதோடு விடவில்லை, துணை சபாநாயகராக தேர்வு செய்யப்பட்ட ரவிசங்கர் தான் பதவி ஏற்ற பின்பு தலைமை செயலகத்தில் உள்ள தனது அறைக்கு சென்றார்.

அப்போது அவரது நண்பர்கள், துணை சபாநாயகரின் இருக்கை எவ்வளவு பாரம்பரிய மிக்கது என்பதை கூட அறியாதவர்களாக அதன் மீது உட்கார்ந்து ரீல்ஸ் எடுத்து வெளியிட்டதும் கடும் கண்டனத்துக்குள்ளாகியது.

இவ்வாறு தவெக நிர்வாகிகள் சிலர் கட்சியின் பெயரையும், தங்களின் புதிய பதவிகளையும் தவறாகப் பயன்படுத்தி அரசு அதிகாரிகளை மிரட்டுவதும், பொது மக்களுக்கு இடையூறு செய்வதும் விமர்சனத்திற்குள்ளாகி வருகிறது.

ஆட்சிக்கு வந்து சில வாரங்கள் மட்டுமே நிறைவடைந்த நிலையில் தொண்டர்களின் அடாவடிக்கு முதல்வர் விஜய் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற விமர்சனங்கள் சமூகவலைதளங்களில் கொடிகட்டி பறக்க தொடங்கியுள்ளது.

இதன் எதிரொலியாக, தமிழக வெற்றி கழக (தவெக) தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகள் எல்லை மீறி நடந்து கொள்ளும் சில சம்பவங்கள் சமூக வலைத்தளங்களில் 'அலப்பறை' என விமர்சிக்கப்பட்டு வைரலாகி வருகின்றன. இந்நிலையில், அரசு விவகாரங்களில் தவெகவினர் தலையிடக்கூடாது என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் அதிரடி உத்தரவு பிறப்பித்தார்.

ஆனால் அவரது அறிவுரைகளை எந்த ஒரு தவெகவினரும் கண்டு கொள்ளவில்லை என்பதை இன்னொரு சம்பவமும் உறுதிபடுத்தியுள்ளது. அதாவது, சென்னை மாநகராட்சி சோழிங்கநல்லூர் 15வது மண்டலக்குழு அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாதாந்திர கூட்டம் நடைபெற்றது. இது போன்ற மாதாந்திர கூட்டத்தில் மண்டலக்குழு தலைவர், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் துறை சார்ந்த சென்னை மாநகராட்சி அதிகாரிகள் கலந்துகொள்வது வழக்கம்.

எந்த ஒரு அரசியல் கட்சியினரும் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு அனுமதி இல்லாத நிலையில், இந்த கூட்டத்தில் சோழிங்கநல்லூர் எம்எல்ஏ பி.சரவணமூர்த்தி கலந்து கொண்டார். அவருடன் சேர்ந்து தவெக கட்சியினர், கூட்டம் நடைபெறும் அரங்கிற்குள் உள்ளே புகுந்து ரீல்ஸ் எடுக்கும் பணியில் ஈடுபட்டனர். அதேபோல் தவெக கட்சியை சேர்ந்த ஒருவர் மைக்கில் சோழிங்கநல்லூர் தொகுதி முழுவதும் உள்ள சென்னை மாநகராட்சி அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கினார்.

அரசு அதிகாரிகள், மாமன்ற உறுப்பினர்களுக்குள் நடைபெறும் கூட்டத்தில் தவெகவினர் சுமார் 20க்கும் மேற்பட்டோர் அனுமதியின்றி உள்ளே புகுந்து நாற்காலியில் அமர்ந்து கொண்டு அதிகாரிகள் போன்று அதிகாரம் செய்தனர். எம்எல்ஏ ஒருவர் மண்டலக்குழு கூட்டத்திற்குள் தனது ஆதரவாளர்களை அழைத்து சென்றதும், அதிகாரிகள் நாற்காலியில் அமர்ந்து கொண்டு அதிகாரம் செய்ததும் சென்னை மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் மத்தியில் முகம் சுளிப்பை ஏற்படுத்தியது. அரசு நிர்வாகத்தில் தவெக கட்சியினரின் இந்த தலையீடு மற்றும் அத்துமீறல்கள் பொதுமக்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. தற்போது தவெகவினர் தங்களை எம்எல்ஏக்களாகவே நினைத்துக் கொண்டு ஆய்வில் இறங்கியுள்ளனர். இன்னும் முதல்வரின் பணிகளையும் அடுத்த சில நாட்களில் செய்வதற்கு தவெகவினர் தயங்க மாட்டார்கள் என்ற கேலி கிண்டல் இணைதள மீம்ஸ்கள் வைரலாகி வருகிறது. ஆட்சிக்கு வந்து ஒரு சில வாரம் மட்டுமே நிறைவடைந்த நிலையில் தொண்டர்களின் அடாவடிக்கு முதல்வர் விஜய் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதே பலரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

காற்றில் பறந்த புஸ்ஸி உத்தரவு

தவெகவினரின் அத்துமீறல்களுக்கு முடிவு கட்டும் வகையில், அரசு விவகாரங்களில் தவெகவினர் தலையிடக் கூடாது என்றும், தவெகவினர் தங்களுடைய எல்லை என்ன என்பதை அறிந்து செயல்பட வேண்டும் என்றும் மக்கள் பிரதிநிதிகள் அல்லாதோர் அரசு சார்ந்த விவகாரங்களில் தலையிடவோ, ஆய்வுகளை மேற்கொள்ளவோ கூடாது என தவெக பொதுச்செயலாளரும், அமைச்சருமான புஸ்ஸி ஆனந்த் உத்தரவிட்டார். இவ்வளவு களேபரத்துக்கு இடையில் அவர் உத்தரவு போட்ட அடுத்த சில நிமிடங்களில் அந்த உத்தரவை மீறி கோவை பகுதியில் தவெக எம்எல்ஏ ஒருவர் அதிகாரிகளை தனது வீட்டிற்கு வரவழைத்து ஆலோசனை கூட்டம் நடத்தியது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

Government of India
Department of Space
ISRO Propulsion Complex (IPRC)
Mahendragiri P.O., Tirunelveli District, Tamil Nadu– 627 133, India

E-TENDER NOTICE Dated : 22-05-2026

On Behalf of the President of India, item-rate tenders are invited through **e-tendering** for the following works:

Sl. No.	Name of Work	Estimated Cost ₹ (in Lakhs)	Period of completion	EMD(₹)
1	NIT no:IPRC/CMG/TD/e-10/MW/CMP-02/2026-27			
	Vertical extension of Main Building at IPRC, Mahendragiri. [Civil, PH, Electrical & AC works].	565.00	12 (Twelve months)	11,30,000
2	NIT no:IPRC/CMG/TD/e-11/MW/CMP-03/2026-27			
	Construction of LVM3 Hardware storage facility at IPRC, Mahendragiri. [Civil, PH, Electrical, Mechanical & AC works].	1259.59	18 (Eighteen months)	22,60,000

Dates for Online Request : From 23-05-2026 [1000 hours] To: 05-06-2026 [2330 hours]
Due Time & Date of Submission : 16-06-2026 [1400 hours]
For further details visit: www.isro.gov.in/tenders (or) www.tenderwizard.com/ISRO.
Note : All future correspondence (Corrigenda) for the above work(s) shall be published only on the websites mentioned above.
GROUP HEAD, CMG, IPRC

RBL BANK
ஆர்பிஎல் பேங்க் லிட்
பதிவு அலுவலகம்: முதல் சந்து, சாஹ்புரி, கோலாப்பூர்-416001.
கிளை அலுவலகம்: சாய் கல்யாணி டவர்ஸ், 56/105, ஜி.என்.செட்டி சாலை, தி.நகர், சென்னை, தமிழ்நாடு-600017

அடையாளப்பூர்வ சுவாதீன அறிவிப்பு

ஆர்பிஎல் பேங்க் லிமிடெட்டின் அதிகாரப்பூர்வ அதிகாரி பத்திரமயமாக்கல், நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி 3 உடன் பிரிவு 13(12) கீழ் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கோரிக்கை அறிவிப்பு வழங்கி கடன்தாரர்/ஜாமீன்தாரர்/அடமானதாருக்கு அறிவிப்பில் குறிப்பிட்டத் தொகையை மேற்கூறிய அறிவிப்பு கிடைக்கப்பெற்றத் தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார்.
கடன்தாரர்/ஜாமீன்தாரர்/அடமானதார் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளார். இதன்மூலம் கடன்தாரர் ஜாமீன்தாரர்/அடமானதாரர்/ சட்டப்பூர்வ வாரிசு மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கு வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே கையொப்பமிட்டவர் ஆர்பிஎல் பேங்க் லிமிடெட்டின் அதிகாரப்பூர்வ அதிகாரியாக மேற்கூறிய விதிகளின் விதி 9 உடன் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) கீழ் அவருக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி இங்கே கீழே விவரிக்கப்பட்ட சொத்தினை கீழ்க்காணும் விவரத்தின்படி அடையாளப்பூர்வ சுவாதீனம் செய்துள்ளார்.

கடன் கணக்கின் பெயர் மற்றும் கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள்	கோரிக்கை அறிவிப்பு நாள்	நிலுவைத்தொகை (ரூ.)	அடையாளப்பூர்வ சுவாதீனம் செய்யப்பட்ட அசையா சொத்துகளின் விவரங்கள்	அடையாளப் பூர்வ சுவாதீன நாள்
1. திரு ராமச்சந்திரன் கிருஷ்ணா வடிவு நாடார், S/o திரு. கிருஷ்ணவடிவு நாடார், எண்.9-102A, ஆலங்கோட்டை, கணபதிபுரம், அகஸ்தீஸ்வரம், கன்னியாகுமரி, தமிழ்நாடு-629502. 2. திருமதி. விஜயராணி அருணாச்சல பெருமாள், க/பெ திரு. ராமச்சந்திரன் கிருஷ்ண வடிவு நாடார், எண்.9-102A, அல்லாங்கோட்டை, கணபதிபுரம், அகஸ்தீஸ்வரம், கன்னியாகுமரி, தமிழ்நாடு-629502. கடன் கணக்கு எண்: 809002840535	02-03-2026	02.03.2026 தேதியன்று ரூ.7,92,327.57 (ரூபாய் ஏழு லட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரத்து முன்னூற்று இருபத்தேழு மற்றும் பைசா ஐம்பத்தேழு மட்டும்) மற்றும் ஒப்பந்தபடியிலான விகிதத்துடன் கூடிய வட்டி.	சொத்தின் உரிமையாளர்: திரு. ராமச்சந்திரன்:- சொத்தின் அட்டவணை: மாவட்டம் கன்னியாகுமரி, பதிவு மாவட்டம் கன்னியாகுமரி, துணைப் பதிவாளர் அலுவலகம் ராஜக்கமங்கலம், தாலுகா அகஸ்தீஸ்வரம், கிராமம் நீண்டகரை 'பி', மறு சர்வே எண். 652/11, பரப்பளவு 4.225 சென்ட், தனிப் பட்டாவின்படி பரப்பளவு 3.750 சென்ட் மட்டுமே, எனவே நான் 3.750 சென்ட்டுக்கு மட்டுமே (1633.5 சதுர அடி) அனுமதி அளிக்கிறேன். பட்டா எண். 11788. எல்லைகள்: கிழக்கு: தங்கையா நாடார் என்பவருக்குச் சொந்தமான சொத்து; தெற்கு: சாலை; மேற்கு: பொன்னையா என்பவருக்குச் சொந்தமான காலி நிலம்; வடக்கு: பண்டாரக்குட்டி நாடார் என்பவருக்குச் சொந்தமான சொத்து.	21st May 2026

கடன்தாரர்/ஜாமீன்தாரர்/அடமானதாருக்கு குறிப்பாகவும் மேலும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன்மூலம் எச்சரிக்கப்படுவதாவது மேற்கண்ட சொத்துடன் எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ள வேண்டாம் மேலும் சொத்துடனான அனைத்து நடவடிக்கைகளும் ஆர்பிஎல் பேங்க் லிமிடெடின் வசூலுக்கு உட்படும்.
இடம்: கன்னியாகுமரி, நாள்: 21.05.2026
ஒம்/- அதிகாரப்பூர்வ அதிகாரி, ஆர்பிஎல் பேங்க் லிமிடெட்.

GRIHUM
க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்
பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், B பில்டிங், கங்கா ட்ரினோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா-411014.கிளை அலுவலக அலகு: தரைத்தளம், இரண்டாவது பகுதி, இவான்ஸ் காம்ப்ளெக்ஸ், 14, பேலஸ் சாலை, நாகர்கோயில்-629001, கன்னியாகுமரி மாவட்டம், தமிழ்நாடு.
மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு
சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8 மற்றும் 9 கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.
இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப-கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (இதற்குப் பிறகு சட்டத்தின்படி கடனீட்டு கடனீந்தோர் என்று குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், சட்டத்தின் பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளது.
நிரல் (J) இல் குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் மின்-ஏலம் மூலமாக 08.06.2026 தேதியன்று விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்- ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்-ஏலம் நடைபெறும்.
விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com- ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை (நிர்ணய விலையில் 10%)(F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	தெரிந்த வில்லங்கங்கள் / நீதிமன்ற வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K)
1	கடன் எண்: LAP0561200000005054097 & HL0056120000000505l268 ஐசக் T (கடன்தாரர்) பிரியா வர்கீஸ் (உப கடன்தாரர்) சாரவி அல்போன்ஸ்	அறிவிப்பு தேதி: 08-08-2025 08-08-2025 தேதியின்படி மொத்த நிலுவைத் தொகை: ரூ.1302814.00/- (ரூபாய் பதின்மூன்று லட்சத்து இரண்டாயிரத்து எண்ணூற்று பதினான்கு மட்டும்) இதில் கடன் கணக்கு எண். LAP0561200000005054097 இன்படி ரூ. 534635.00/- & கடன் கணக்கு எண். HL0056120000005051268 இன்படி ரூ. 768179.00 உள்ளடங்கும் மற்றும் பணம் திருப்பிச் செலுத்தும் காலம்வரையிலான ஆண்டொன்றுக்கு முறையே 16.35% & 16.60% வட்டியுடன்.	கையக	மறு சர்வே எண்.695/2a1 இல், பழைய சர்வே எண்.2860, கலியல் கிராமம், இப்போது கடயல் கிராமம், விளவங்கோடு தாலுகா, அருமனை துணை பதிவாளர் அலுவலகம், மார்த்தாண்டம் பதிவு மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம், கடயல் டவுன் பஞ்சாயத்து கதவு எண்.7/38c2, இல் உள்ள 202.35 சதர மீட்டர் நிலத்திற்கு சமமான 5.00 சென்ட் பரப்பளவு உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள நிலம் மற்றும் கட்டிடத்துடன் கூடிய சொத்து. எல்லைகளாவன: கிழக்கு : பாதை, தெற்கு: ராய்ப்பன் சொத்து, மேற்கு: ஆரீஷ் சொத்து, வடக்கு: ரோமஸ் சொத்து	Rs. 700000.00/- (ரூபாய் எழு லட்சம் மட்டும்)	Rs. 70000.00/- (ரூபாய் எழுபதாயிரம் மட்டும்)	06-06-2026 Before 5 PM	10,000/-	01-06-2026 (11AM – 4PM)	08-06-2026 (11 AM- 2PM)	எதுவுமில்லை

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச்சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்து கொள்ள அருகில் உள்ள கடனீட்டு கடனீந்தோர் கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்து வரி, மின்சாரம்/தண்ணீர் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும்.
ஆர்வமுள்ள ஏலதாரர்கள் மின்-ஏலத்துக்கு தேவையான பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், முகவரி: மனை எண்.68, 3 ஆவது தளம், கூர்கான், ஹரியானா-122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, தொடர்பு நபர்: தாரணி P, மின்னஞ்சல் முகவரி: dharani.p@c1india.com, தொடர்பு எண்.9948182222 மூலமாகவோ தொடர்பு கொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆக்சன் ப்ரஸீட்ஸ் A/C, ICICI BANK LTD, கணக்கு எண்.091551000028 மற்றும் IFSC Code- ICIC0000915, ஐசிஐசிஐ பேங்க் லிமிடெட், பான்ட்ச்சில் டெக்னிகல் பார்க், கணபதி சௌக் அருகில், 43/44, விமன் நகர்-411014 என்ற கிளையில் செலுத்தத்தக்கவிதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது செட்யூல்டு வங்கியிலோ நிரல் (G) இல் குறிப்பிடப்பட்ட தேதி அன்றோ அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் இல் பெயரை முன்னதாகவே பதிவு செய்து ... இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். ... பகுதி, இவான்ஸ் காம்ப்ளெக்ஸ், 14, பேலஸ் சாலை, நாகர்கோயில்-629001, கன்னியாகுமரி மாவட்டம், தமிழ்நாடு மேலும் கைபேசி எண். +91 9597907666, மின்னஞ்சல் முகவரி baskaran.soundarrajan@grihumhousing.com. 06.06.2026 தேதியன்றோ அல்லது முன்னதாகவோ தொடர்பு கொள்ள வேண்டும். மின்-ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள https://www.bankeauctions.com & www.grihumhousing.com- ஐ பார்வையிடவும்.
கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டம்-2002 இன் விதி 8(6) இன் கீழ் கடன்தாரர்/ உப - கடன்தாரர் / அடமானதாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது 15 (பதினைந்து) நாட்கள் அறிவிப்பு என்று கருதத்தக்கதாகும்.
உள்ளூர் மொழி வெளியீட்டில் அல்லது ஆங்கில செய்தித்தாள் வெளியீட்டில் உள்ளடக்கங்களில் ஏதேனும் வித்தியாசம் இருந்தால் பிசினஸ் ஸ்டாண்டர்டு ஆங்கில செய்தித்தாளில் வெளியிடப்பட்ட உள்ளடக்கமே ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும்.
நாள்: 23.05.2026, இடம்: தமிழ்நாடு
ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்